வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செப்பநிட் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி ஹூ (1889) ஆவணிமீ 28-ம உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 400. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத் - அக ] யாழ்ப்பாணம்:- பிங்கள ஹூ ஐப்பசி மீ ரு - உ வெள்ளிக்கிழமை ( 21 - 10 - 1977 ) [இல: உள

## தேவி திருவருளை தேடித் தெளியும் நெறி

அன்னை அருளை அடைய முன்னைப் புண்ணியம் வேண்டும். கன்னித்தெய்வத்தின் நாமத்தைக் கற்கவும் கசிந்து பத்தி பண்ணவும் முன் செய்த புண்ணியம் ஏதென்று வியக்கின்ற அபிராமிப்பட்டர் வானவர் வந்திக்கவும் அயனும் மாலும் சிந்திக்கவும் பரமானந்தராகும் சிவயோகிகள் பந்திக்கவும் சிவசத்தி அரிதாயிருந்தும், பாரிலே அப் பெருமாட்டியைச் சந்திப்பவர்க் கெளிதாகின்றாயே என்று தாயின் தண்ணளியை வியக்கின்றார். கோயில் வழிபாட்டின் குணத்தை விளக்குவது காண்க.



இத் திருவருள் வழி வழி வந்த புண்ணியத் தேட்டத்தின் பொலிவாகும். இப் பொலிவு முன்னே செய்த பல கோடி தவங்களில் பயனுக அழியா முத்தியக் பண்ணவிக்குஞ் சொர பரிமள யாமளைப் பைங் கிளியின் கொடையாகும்.

அடியர் அகத்திற் சுக்குபமாய்ப் பின் தூலமாய்ச் சிவசைதன்னியமாய்ச் சிவசைதன்னிய காரணியாய் இருப்பவள் அன்னையென்பர். இருந்தும் எண்ணிப் பார்க்கும்பொழுது இவை யாவுமில்லாப் பரவெளியாகும் உலகன்னை ஐப்பூதங்களின் விரிவாகவும் இருக்கின்றாள். ஆழ்ந்து கினைக்

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

### ஸ்ரீசக்ரம்

விந்து திரிகோண மெண்கோணம் வேறிரண்டாய்
வந்த தசகோண மனுகோணம் - முந்துதளம்
எட்டுமீ ரெட்டுமேல் மூவட்ட முச்சதுரம்
இட்டது ஸ்ரீசக்ரத் தியல்.

## பண்ணிசைச் சங்கப்பலகையின் தீர்ப்பு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் 16-10-77 -இல் நடாத்தப்பெற்ற பண்ணிசைப் போட்டியில் 60 மாணவர்கள் பங்குபற்றினர். அதில் பின்வருவோர் பரிசில்களைப் பெறுகின்ருர்கள். இப் போட்டியில் 25 சைவ மன்றங்கள் பங்குபற்றின.

### மேற்பிரிவு

முதலாம் இடம். செல்வி நல்லையா சண்முகப்பிரியா
அகில இலங்கை காந்தி சேவா சங்கம், உருத்திரபுரம்
இரண்டாம் இடம். செல்வி K. ஸ்ரீமதி
நாவலர் பண்ணிசை மன்றம், சைவபரிபாலன சபை
மூன்றாம் இடம். செல்வி சிவப்பிரகாசம் தர்மகுணதேவி
ஐயனர் சைவ சமய அபிவிருத்திச் சங்கம், அராலி,

### மத்திய பிரிவு

முதலாம் இடம். செல்வி பராசக்தி சிவலிங்கம்
ஆறுமுக நாவலர் சபை, நல்லூர்
இரண்டாம் இடம். செல்வன் அருள்மணிநாதன் சுப்பிரமணியம்
திருமுறை மன்றம், தெல்லிப்பழை
மூன்றாம் இடம். செல்வி வசந்தினி அம்பலவாணர்
ஞான பண்டித சைவ விருத்திச்சங்கம், கோப்பாய்


### கீழ்ப் பிரிவு

முதலாம் இடம். செல்வி சந்திரிகா கணேஸ்பரன்
இந்து சமய விருத்திச் சங்கம், மானிப்பாய்
இரண்டாம் இடம். செல்வி வசந்தாதேவி கேசராசா
சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி
மூன்றாம் இடம். செல்வி லோகேந்திரா செல்லத்துரை
அராலி தெற்கு சனசமூக நிலையம், வட்டுக்கோட்டை

### ஆரம்ப பிரிவு

முதலாம் இடம். செல்வி ரஞ்சினிதேவி நேசராசா
செம்பியன் ஞானவைரவர் பஜனை மன்றம், அராலி
இரண்டாம் இடம். செல்வி விஜயகுமாரி மாணிக்கம்
சரஸ்வதி மகாவித்தியாலயம், அராலி

வளர்ச்சி 3-ம் பக்கம்



## பண்ணிசைக்கு ஆண்டு தோறும் பரிசு

### தங்கப் பதக்கம் உவந்தளிக்க மலேசிய சைவஅன்பர் திரு எஸ். துரைராசசிங்கம் அவர்கள் முன்வந்துள்ளார்

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் வாழ்க்கை வரலாறு, அன்னாரின் புகழ்பெற்ற தந்தையின் பணி, அக் குடும்பத்துதித்த பல பேரறிஞர்களாம் வள்ளல் பொன். இராமநாதன் முதலியவர்களின் கல்வித்தொண்டு, ஆகியவற்றைப் பல ஆதாரங்களுடன் சிறந்த நூல்களாக ஆக்கிய அருங்கலை இரசிகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் மலேசியாவில் தற்போது வசிப்பவருமாகிய சைவப் பெரியார் திரு எஸ் துரைராஜசிங்கம் அவர்கள் சைவபரிபாலனசபை அனைத்திலங்கைப் பண்ணிசைத் தேர்வு நடத்தி முதலிடம் வகிப்பவர்களுக்கு ஆண்டுதோறும் தங்கப் பதக்கம் பரிசாக வழங்க முன் வந்து அதற்குரிய முதலைத் தமது பிரதிநிதி திரு. . செல்வசிங்கம் மூலம் எங்கள் சபைத் தலைவர் திரு. ச. செல்வராசா அவர்களிடம் அளித்த நிகழ்ச்சியின் புகைப் படம். சபைச் செயலாளர் சைவப்புலவர் க. சிற்றம்பலம் அருகில் நிற்கின்றார்.

எங்கள் ஆசிரியர் மலேசியாவில் நடந்த அனைத்துலக முதலாவது இந்து மாநாட்டிற் கலந்து கொள்ளச் சென்ற மார்கழி மாதம் ஆங்கு சென்றபொழுது திரு. துரைராசசிங்கம் அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டுமுகமாக அவரைச் சந்தித்தபொழுதே இந்தப் பண்ணிசைப் பரிசு நோக்கம் திரு. துரைராசசிங்கம் அவர்களின் உள்ளத்தில் உதித்தது. தமது அரிய புத்திரன் வைத்திய கலாநிதி ஆனந்தக்குமாரசுவாமி ( கலாயோகிமீதுள்ள பெருமதிப்பாலே தமது புத்திரனுக்கும் அந்த உத்தமப் பெயரைச் சூட்டினர்) அகாலமாக இவ்வுலக வாழ்வு நீத்தமையை நினைவுக்கெடுக்கும் நிகழ்ச்சியாக இந்தச் சைவத் திருமுறைப் பணியை சைவ சீலர் திரு. துரைராசசிங்கம் ஆற்ற எண்ணி முன் வந்தமை திருவருள் நிகழ்ச்சியே என்று அமைகின்றேம், இச் சிவநேயரின் அரிய செயலை எங்கள் சபை சார்பாகவும் ஈழம்வாழ் சைவ மக்கள் சார்பாகவும் உளம்கொண்டு பாராட்டுகின்றோம். வாழ்க சிவதொண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பிங்கள ஞூ ஐப்பசி மீ ரு-உ வெள்ளி

# தீராநோயா?- தீமையகலாதா?

திசை மாறிச் செல்கின்றது மக்கள் சமுதாயம் என்ற கருத்து நிலவி வருவதாக எண்ண இடமுண்டு. ஆம்: அது மெய்யே. விண்வெளியில் நின்றே விமானங்களைத் திசை திருப்பும் காலமல்லவா? மண்மீது விசை வண்டிகளைக் கைப்பற்றிச் சாரதிகளைத் திக்குத் தெரியாது திகைக்க வைக்கும் காலமல்லவா! வன் செயல்கள் மீறி மக்கள் திக்கற்றவர்களாய்க் கலங்கும் காலமல்லவா? ஆகவே பலவிதமாயிருந்த உலகம் இப்பொழுது கலகம் என்ற ஒரே விதமாக இருக்கின்றதென்றல் அது உண்மைதானே,

தீமை தாண்டவம் ஆடுவதென்றல் இதைத் திசை திருப்பவும் வழியுண்டென்பதை மக்கள் மறந்து விட்டார்கள்போலும்! பொல்லாங்கிழைத்தவர்கள் நல்லவர்களாய் வரவில்லையா? மகிடாசுரன் தீமையின் சின்னம். அவனை அகற்றியது யார்? அவனு லல்லலுற்றவர்கள் உலகன்னையை நினைந்து நோன்பிருந்தபொழுது துர்க்காதேவி தோன்றித் துணை புரிந்த நிகழ்ச்சியை நினைவூட்டும் நவராத்திரி வேளையில் நாமும் தீமை யகற்றும தவஞ்செய்யச் சதா சிந்திப்போமாக.

தவம் என்றல் என்ன? ஒழுக்கநெறியே. சமய நெறி வகுத்த குரவர் எல்லோரும் ஒழுகக் கட்டுப்பாட்டில் உயர்ந்தவர்கள். இறைவணக்கம் ஒழுக்கத்தை உண்டுபண்ணும் என்பதை இனியாவது மககள் உணர வேண்டாமா? முப்பொழுதும் முதல்வனை வழிபடுவோர் எம் மூதாதையர். உரிய வயதிலே சமய தீட்சை பெற்றுச் சரியை கிரியை மார்க்கங்களிலே கட்டுப்பாட்டுடன் ஒழுகி வந்தனர். ஆகவே புலன்களை வழிப்படுத்தினர் புத்தியைச் சித்தமாக வைத்தனர் இக்காலத்தில் ஒருபொழுது தானும் தியானம் செய்வோரைக் காண்பதரிது.

சமய தீட்சை சொல்லளவிலேயே யிருக்கின்றது. கடந்த ஞானம் பேசுகின்றவர்களாய்த் தாம் சரியாபாதம் கிரியாபாதம் இரண்டுக்கும் அப்பாற்பட்டவர்கள் என்று சொல்லிச் சமயானுட்டானஞ் செய்ய மறுக்கின்றவர்கள் பெரும்பாலானோர் வசதி வாய்த்தாலன்றிக் கோயிலுக்குச் செல்லார். ஆகவே ஒழுக்க நெறி இழுக்கடைந்து விட்டது.

சந்தியாவந்தனம் என்ற பயிற்சி மனத்தை வழிப்படுத்துவதுடன் உடம்பையும் ஒழுங்குபடுதலும் நெறியாகும். பொழுது புரை முன் எழுந்து இறைவனை எண்ணியபடி அவசிய கருமஞ் செய்தபின் நீராடி அநுட்டானம செய்யும் பொழுது ஒழுக்கம் தானுக அமையும், சிந்தனை தெளிவாகும் சொல்லுவது நல்லதேயாகும் செய்கையும் சீரியதாகும், இங்கிலையிலே தீமை தலைகாட்டமுடியுமா?

கலக்கம் நீங்கிக் கவலையற்றுக் காலத்தைக் கழிப்பதற்கு ஒரே ஒரு வழி தீரா நோய் தீர்க்கும் தீட்சையைக் கைகொள்வதே, ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந்தருவது நீறு. வெந்துயரினின்றும் விடுபட வேத சிவாகமங்கள் சொல்லும் அநுபூதியாம் விபூதியைப் பூசி உருத்திராக்க மணியுடன் மூல மந்திரத்தை உச்சரித்து மனத்தை அடக்கி மாதேவன் வார்கழலை நினைவக்க வைக்கும் சமய தீட்சையை மக்கள் யாவரும் பெற்றுச் சாதனை செய்தால் தீமையகலும் வேதனை நீங்கும்; மேல்நெறி ஓங்கும்; நாமெல்லோரும் உய்வோம்.

## 19-ஆவது ஆண்டு இசைவிழா பங்குனியில்

யாழ், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 19-ஆவது ஆண்டு இசைப் பெருவிழா 1978 பங்குனிக்குப் பின் போடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் ஆவணி பிற்பகுதியில் நிகழ்ந்து வந்த இவ் விழா நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வன்செயல் காரணமாகப் பின் போடப்பட்டுள்ளதாக மன்றத்தினர் தெரிவிக்கின்றனர்.

## அபிராமியந்தாதி ஓதல்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் நவராத்திரி தினங்களில் அபிராமியந்தாதி ஓதப்பெற்று வருகின்றது,

# இரு நூற்றூண்டுகளுக்கு முன் எழுந்த நிகழ்ச்சி

## துர்க்கை அம்பாள் கோயிலிலே மாவைச் சுப்பிரமணிய சுவாமி உலா

மானம்பூ என்றவுடன் துர்க்கை அம்மன் கோயிலையும் மாவைக் கந்தன் ஊர் உலாவையும் இயல்பாக மக்கள் எண்ணுவது வழக்கம். இப்பெரு நிகழ்ச்சியின் வரலாறு என்ன என்று யாரும் நோக்கியதில்லை. ஆனல் மாவை ஆதீனகர்த்தா ஆக விளங்கும் வேதாகம விற்பன்னர் சிவஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் மாவைக் கந்தன் கோயில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் வேளையிலே இந்த மானம்பு நிகழ்ச்சியைப்பற்றிய சில அரிய குறிப்புகளைக் கண்டிருப்பது தொன்மையின் பெருமையைச் சிந்திக்கும் சமயிகள் யாவராலும் பாராட்டப்பட வேண்டியது.

ஆங்கில ஆண்டு ஆயிரத்தெழுநூற் றறுபத்தாறும் ஆண்டு என்றல் இற்றைக்கு இருநூற்றுப் பதினொருவருடங்களுக்கு முன்னுள்ள காலம. அந்த ஆண்டிலே தான் முதல் முதலாக இந்தக் கன்னி வாழை வெட்டு வைபவம் நிகழ்ந்த தென்றும், அந்த நிகழ்ச்சியை நிறுவியவர்கள் மாவை ஆதீன சிவஸ்ரீ சாமிக்குருக்கள் என்றும, அம்முயற்சியில் முன்னின்று உழைத்தவர்கள் கோவைச் சேனதிராசர், நல்லூர் கந்தப்பர் ஆதியாம் சைவப் பெரியார்கள் என்றும் அறியக்கிடப்பதாக சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் சொல்லக் கேட்டார்கள் துர்க்கை அம்பாள் கோயில் நிருவாக சபையினர்.

இந்த ஆராய்வில் இன்னெரு கருத்து விளக்கமும் தெளிவானது. ஒரு கோயிலிலே வன்னி வாழை வெட்டும் நிகழ்ச்சிகள் ஒரேநாளில் இருமுறை நடைபெறலாமா என்ற சந்தேகம் ஒன்று உண்டு, காரணம் சமய நிகழ்ச்சிகளின் வரலாறு வெளியிடப் படாமையே. இக்குறையை மாவை ஆதீனகர்த்தாஇப்பொழுது நிவிர்த்தி செய்து சைவமக்கள் அறியவேண்டிய பல அரிய குறிப்புகளைத் தொகுத்துத் திரட்டி நூல் வடிவமாக வெளியிட இருக்கின்றூர் என்பது மசவும பொருந்தமானது.

மகிடா சூரனை அழித்த தற்ப வேறசுரனைச்சம்காரம் செய்ததற்கும் மூலகாரணங்கள் அந்த மும்மூர்த்திகளே. மாலும் அயனும் தத்தமக்குள்ள தத்துவங்களாலே தாமே சர்வ அதிகாரம் பெற்றவர் என்று ஒருவருக்கொருவர் வாக்குவாதம பல வேளைகளில் நிகழ்த்தியதும அவ்விருவரும் எவ்வகையிலும் "பரமம" ஆகார் என்பதுவும் இறைவனின் திருவிளையாடல்களால் அறிகின்ரேம்

## துர்க்காதேவி ஆலயம்

இன்று மாலை 6 மணிக்கு மாவைக் கந்தன் துர்க்காதேவி கோயில் எழுந்தருளி மானம்பு விழா நிகழ்கின்றது- காலையில் அம்பாள் உலாவும் வன்னி வாழை வெட்டலும் வித்தியாரம்பமும் நிகழ்கின்றன.

# சமய பாடத் தேர்வில் உயர் இடம்

## மாணுக்கர்களுக்குப் பதக்கப் பரிசில்கள்

சைவ பரிபாலன சபையார் ஆண்டுதோறும் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் அகில இலங்கைப் பரிசில்களாகிய தங்கப் பதக்கப் பரிசில்களும, நூல்களும் அவற்றைப் பெற்றுள்ள பாடசாலைகளுக்கு வழங்கப் பெற்றன.

தங்கப் பதக்கம் பரிசில் பெற்றவர்களின் பதக்கங்கள் அவ்வப் பாடசாலை மாணவர் கூட்டத்தில் வைத்து அதிபர்கள் தலைமையில் சென்ற வாரத்தில் வழங்கப்பெற்றன.

### தங்கப்பதக்கம் பெற்றவர்கள்

1974

1. சிவமணி சிவசுப்பிரமணியம் யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
2. கிருஷ்ணனந்தி சோமசுந்தரம் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
3. அனுஷபவானி இராமலிங்கம் வேலணை மத்திய மகாவித்தியாலயம்.

1975

1. ரதி வேலுப்பிள்ளை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
2. அருந்ததி சிவசுப்பிரமணியம் மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.
3. நடேசநந்தினி நடராசா யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

1976

1. [illegible] யா/ வேம்படி மகளிர் கல்லூரி.
2. பிரபா தம்பிராசா யா/ இந்து மகளிர் கல்லூரி.
3. யசோதா மருதலிங்கம் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்

## நவராத்திரி கால நாட்டியாஞ்சலி

### சன்மார்க்க சபையின் 43-ஆம் ஆண்டு நிறைவு

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நாற்பத்துமூன்றும் ஆண்டு நிறைவுவிழா நவராத்திரிக் காலத்தில் அமைந்தது ஓர் சிறப்பு. அச் சபையின் தலைவர் கலைப்பேரரசு பொன்னுத்துரை அவர்கள் ஆணையால் விழாவில் (18- 0-1977) நாட்டியாஞ்சலி நல்கு பொலிந்தது,

கலைக் கோயில் நாட்டியாலயம் என்ற மன்றம் அன்றைய நிகழ்ச்சிகள் யாவும் செல்விகளின் செல்வாக்காக ஒழுங்கு செய்திருந்தது. மகாஜனக்கல்லூரி அதிபர் திரு, பொ, கனகசபாபதி அவர்கள் மங்களதீபமேற்றி வைத்ததும் தலைவரின் உரையின்பின் நடன அலங்காரம் கவர்ச்சிகரமாக இருந்தது.

### மல்லாகம் மகா வித்தியாலயத்தில்

வழமைபோல வித்தியாலய இந்து மாணவர் மன்றம் கலை நிகழ்ச்சிகள்நடத்தியது. விசேடமாகச் சரஸ்வதி பூசையன்று வட்டாரக் கல்வி அதிகாரி திரு, சிவஞானசுந்தரம் ஆசிச் செய்தி அனுப்பி விழாவைச் சிறப்பித்தனர்.

## துர்க்கா துரந்தரியின் சிங்காபுரிப் பயணம்

இரண்டு வாரங்கள் தொடர்ந்து சைவச் சொற்பெருக்கு சிங்கைச் செண்பக விநாயகர் ஆலயத்தில் நடத்தி விட்டுத் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சரஸ்வதி பூசை ஆரம்ப தினமாகிய செவ்வாய்க்கிழமை யாழ் நாடு திரும்பி உடனடியாகச் சரஸ்வதி பூசையிற் கலந்து கொண்டார்.

## வித்தியாரம்பத்துக்கு வேண்டிய தொண்டு

அரிச்சுவடு ஏடுகளை வவனியாப் பகுதிப் பாலர் பாடசாலைகளிலும் சிறுவர் கல்வி நிலையங்களிலும் வித்யாரம்பநிகழ்ச்சிகளின்போது இலவசமாகவழங்க யாழ்- மிக்கவைற் தாபகத்தார் ஒழுங்கு செய்திருப்பதாக அறிகின்றேம். இவற்றைத்தேவைப் படுவோர் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தில பெற்றுக்கொள்ளலாம், ஏனைய இடங்களிலுள்ளோர் திருக்கோணமலை சிவயோக சமாசத்திலும் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண நிலையத்திலும் கொழும்பு மில்க் வைற் தாபனம் 79 மெசன்சர் வீதி நிலையத்திலும் பெற முடியும்,

## பொருத்தமான கருத்தரங்கு

தேசிய பேரவை உறுப்பினர்களுக்கோர் கருத்தரங்கு நடைபெற்றதென்ற செய்தி கருத்தை ஈர்க்கும் புதினமாகும்,

தேர்தல் வேளையில் மக்கள் மத்தியில வேட்பாளர்கள் கருத்தரங்குகளைநடத்துவது சர்வ சாதாரணம், வெற்றிபெற்றுத் தேசிய பேரவையில் உறுப்பினர்களாகும் பேறுடையவர்கள் தங்களுக்குள் ஓர் கருத்துப் பரிமாற்றம வைப்பது முதல முறையாக இங் நாட்டிலேதான் தோன்றி யிருக்கின்றது இது புதினம்மட்டுமல்லப் புதிதாக வமைந்த சனநாயகப் போக்குமாகும்.

இக் கருத்தரங்கில் எதிர்க் கட்சித் தலைவரும் பங்குபற்றியது மேலும் வரவேற்கப்பட வேண்டிய தொன்று. இத் தகைய கருத்தரங்கு மும் மொழிகளிலும் நிகழ்வதே முறையாகும். ஐக்கியநாட்டுத் தாபனத்தின் முன் மாதிரியைப் பின்பற்றி இங் நாட்டுமக்களுக்குரிய எல்லா மொழிகளிலும கருத்துரைப்பது கணணியமாவதுமன்றிக் கடமையுமாகும்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேவி திருவருளை

(1. ஆம் பக்கத்து வளர்ச்சி) கும் அடியார்க்கு இக்காட்சி தோன்றுதல் அரிதல்லவா! அதிசயமல்லவா?

இத்தகைய அதிசய திருமேனிச் சிறப்புடைய அன்னை அப்பனின் இடது பாங்கில் அமையவேண்டியதெற்றுக்கு? அந்த நெற்றிக்கண்ணனை நெறிப்படுத்துதற்கே என்று அதிசயிக்கின்றார் அபிராமிப் பட்டர்.

மானம்பு விழாவுக்குரிய கோயில்கள முருகன் ஆலயமும் துர்க்கை ஆலயமுமே என்பது அறிஞர்கள் கருத்து. நவராத்திரி விழாவை நவமாயமைக்கவேண்டுமென்ற ஆர்வத்தினால் இப்பொழுது எல்லா ஆலயங்களிலும் வன்னி வாழை வெட்டும் வைபவம் நிகழ்வதைக் காணலாம். துர்க்கை கோயிலிலே சுப்பிரமணிய சுவாமி உலாவாகச் செல்லும் நிகழ்ச்சியின் வரலாறு மானம்புக் கிரியையின் தத்துவத்தை விளக்கும் பான்மையிலுள்ளது.

விஜய தசமியிலன்று சுப்பிரமணியக் கடவுள் சம்காரஞ் செய்தது மகிடாசுரனை அல்ல வேறோர் அசுரனை. அன்று பயன்படுத்திய வேலே கந்தசட்டிப் பொழுதிற் சூரபன்மனை அழிக்க உதவியது. வேல் வாங்கிய கந்தபுராண வரலாறு இதைக் குறிக்கும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 1143

வயிரமுத்து தம்பையா
தெல்லிப்பளை தென்மேற்கு
வாதி

எதிராக

வல்லிபுரம் வேலுப்பிள்ளையும்
பெண் பாக்கியமும்
தெல்லிப்பளை தென்மேற்கு
பிரதிவாதிகள்

மல்லாகம் மாவட்டக் கோட்டில் ஈடு 1143 இல வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணிமை. 1977ம் ஆண்டு கார்த்திகை மீ 9ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 268/-பின் 30-8-76 தொடக்கம் 88-12-76 வரைக்கும் ரூபா 2000/- 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுபடும் வரை 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 529-47½ சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவிற்பற்று கந்தரோடை இறை "கிரிசகட்டு" நில பர 4 குளி $11\frac{63}{64}$ எல்லை கிழக்கு அருணி கணபதிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் வடக்கு பூதர் கைப் பெண் சின்னப்பிள்ளையினுதனம் மேற்கு இறைவாய்க்கால் தெற்கு கந்தர் கதிரவேலுவினுதனம். இதடங்கலில் சொரிடலாய் எட்டில் ஐந்து பங்கும் தெற்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்கால் பாவிப்பும்.

சி. செ. மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு
ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

விதானை வளவு,
சித்தங்கேணி. 8-9-77
66, 21-10-77

## தேடி வருகின்றது பனைச்செல்வம்

குடியேற்றப் பகுதிகளுக்குப் பனம் விதைகளைக் கூடுதலாக வழங்க என்றும் போல் இன்றும் "மில்க் வைற்" தொழில் அதிபர் சிவநெறிப் புரவலர் க கனகராசா அவர்கள் ஆயத்தமாயிருக்கின்றார். இவற்

## பண்ணிசைச் சங்கப் பலகையின்

(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

இப்போட்டிக்கு பின்வருவோர் மத்தியட்சர்களாகக் கடமையாற்றினர்.

| | | |
|---|---|---|
| (1) | பண்டிதர் | திரு. வே. சங்கரப்பிள்ளை |
| (2) | சங்கீதபூஷணம் | திரு. P. சந்திரசேகரம் |
| 3 | ,, | திரு K. மாணிக்கவாசகர் |
| (4) | ,, | திரு. R நடராசா |
| 5) | ,, | திரு S. S. இரத்தினம் |
| 6 | ,, | திரு. A. தருமலிங்கம் |
| (7) | , | செல்வி த செல்லத்துரை |
| (8) | பண்ணிசைமணி | திருமதி ம, அருணசலம் |
| (9) | ,, | திருமதி ஜெ. யோகரெத்தினம் |

பண்ணிசையை வளர்ப்பதற்கு சைவ பரிபாலன சபை எடுக்கும் முயற்சி பாராட்டிற்குரியதென்றும் இத்துடன் புராண படனப் போட்டியையும் நடத்த வேண்டும் என பண்டிதர். வே. சங்கரப்பிள்ளை குறிப்பிட்டார் மேலும் நாயன்மார் வழிவந்த திருமுறைகளை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும் மனத்துக்கு அமைதியைத் தரவல்லது திருமுறைகளேயாம். இன்று பல மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றி திருமுறைகளைப் பாடும்போது மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப்போட்டிக்கு ஒழுங்கான பாடத்திட்டம் அமைக்கப் பெற வேண்டும் என்று திரு. P. சந்திரசேகரம் ஆசிரியர் குறிப்பிட்டார். எனது 43 வருட அனுபவத்தில் திருமுறையைப்போல சக்தி வாய்ந்த பாடல் ஒன்றும் காணேன். ஆத்மீக நெறியைத்தரும் திருமுறைகளை ஆலயங்கள் தோறும் ஓதுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். ஓதுவார் மூர்த்திகளை நாடுகள் தோறும் தோற்றுவிக்க சைவ பரிபாலன சபை பணிபுரிய வேண்டும் என்று பண்ணிசைமணி ஓதுவார் மூர்த்தி திரு. V. T. V. சுப்பிரமணியம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

இன்று நடைபெற்ற பண்ணிசைப் போட்டி யாழ் மாவட்டத்திலுள்ள மன்றங்களுக்கு மாத்திரம் நடாத்தப் பெற்றது அடுத்த வருடத்தில் அகில இலங்கை ரீதியாக பண்ணிசைப் போட்டி ஒன்றினை நடாத்தவும் சபையார் திட்டமிட்டுள்ளனர் எனவும் மேலும் இப்போட்டியில் பங்கு பற்றிய மன்றங்களுக்கும் திருமுறைப் பயிற்சியளித்த ஆசிரியர்களுக்கும் மத்தியட்சர் குழுவுக்கும் பண்ணிசைப் போட்டி செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்கள் நன்றியுரை கூறினர்.

## அகங்காரத்தைப் போக்குவதே மகிடாசுர சம்மாரம்

பகுத்தறிவு படைத்தவன் மனிதன் சிறந்த மனிதப்பிறவி கிடைத்த நல்ல இந்தச் சந்தர்ப்பத்தில் யாம் கடவுளை வழிபடுதல் முக்கியம் அகங்காரமாகிய அசுரனைப் போக்குவதே மகிடாசுரசம் மாரம் இதை ஞாபகப்படுவதே நவராத்திரி விழா.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற நவாரத்திரி விழா கும்பாரம்ப நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்துப்பேசிய பண்ணிசைச் செல்வர் பிரமஸ்ரீ ச, முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

வித்தியாலய அதிபர் திரு. வீ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் குருக்கள் தொடர்ந்து மேலும் பேசுகையில் நவராத்திரி ஒன்பது தினங்களும் புண்ணிய நாட்கள் அடுத்த நாள் விஜயதசமியன்று பாடசாலைகளில் வித்தியாரம்பம் செய்து வைக்கிறார் ஆசிரியர் எழுத்தறிவிக்கின்ற அந்த ஆசிரியர் இறைவன் ஆவர் குருவினிடத்தில் ஆசிரியர்களிடத்தில் மாணவர்களாகிய நீங்கள் பக்தி செலுத்துதல் வேண்டும். குருபக்தி உங்களை உயர்ந்தவர்களாக்கும் என்றார்

பிரதி அதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் ஈற்றில் நன்றி தெரிவித்துப் பேசினார்

## சௌந்தரிய லகரி

பகல்தரும் பவானிநின் திரு வலக்கண்
பகலவ னாகிய பரிசால்
இகல்தரும்இரவை ஈந்திடும் இடது
நயனமும் இந்துவா தலினால்
புகல்பக லிரவுக் கிடைபுத சந்திப்
பொழுதினைப் புனிதைநின் நெற்றித்
திகழ்சிறி தலர்ந்த செம்பொனம் புயம்போல்
தீவிழி உதவுமெம மணியே.

அரனிட முவகை, அடியரிற் கருணை
அல்லரில் வெறுப்பு; இறை அணியாம்
அரவிட மச்சம், கங்கைமேல் வெகுளி
அமலனு டலில்வரு வியப்பே
பரவுபாங் கியர்பால் நகை,பதுமத்திற்
பரவுசெவ் வொளியினால் வீரம்
இரவுநேர் குழலாய் எமையருள் அனையுன்
இணைவிழி கொள்சுவை இவையோ!

(பண்டிதர் ச, சுப்பிரமணியம் அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்றதும் இன்னும் அச்சேறாததுமான நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

றைத் தேவைப்படும் மன்றங்களும் கலனேம்பு சங்கங்களும் அன்னாரிடம் தொடர்புகொண்டு, நாடிவரும் நன்கொடையைத் தேடிப் பெறுவது நன்று.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேரா தியல்வது நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவமயம்

## விசேட தீக்ஷை

திருவருளை முன்னிட்டு ஐப்பசி மீ 17-ந் திகதி (2-11-77) புதன்கிழமை அதிகாலை 6-00 மணி 4 நிமிஷம் தொடக்கம் 6-00 மணி 58 நிமிஷம் வரையிலுமுள்ள சுப முகூர்த்தத்தில், யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில், கரணவாய் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் அவர்கள் தலைமையில் விசேட தீக்ஷை செய்து வைக்கப்படும்.

விசேட தீக்ஷை சமய தீக்ஷை பெற விரும்பும் சைவ அன்பர்கள் (2-11-77) க்குமுன் தங்கள் பெயரைப் பதிவுசெய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

க. சிற்றம்பலம், காரியதரிசி.
மு. மயில்வாகனம், சமயப் பிரசார அமைச்சர்.

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம்,
18-10-77.

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. ஈடு 4699.

கந்தையா ஆறுமுகம் சரசாலை — வாதி

எதிராக

சின்னக்குட்டி சின்னத்தம்பி, சரசாலை, சாவகச்சேரி.
பிரதிவாதி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி 4699-ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதி (9-11-77) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 866-10ம் மேலும் ரூபா 866-10-க்கு 7-11-1975 தொடக்கம் 28-10-1976 வரையும் நூற்றுக்கு 10 % வட்டியும் பின் கூடிவரும் தொகைக்கு 28-10-76 தொடக்கம் முழுவதும் இறுக்கும்வரை 5% வட்டியும் வழக்குச் செலவு ரூபா 470/-ம்.

ஆதன இடாப்பு

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சரசாலை இறை முறுகலி வளவு நிபர. 4½ இந்த நிலப்பரப்பு நாலரைக்கும் எல்லைகிழக்கு நடைவரம்பு வடக்கு கணபதி சின்னத்தம்பிக்கு மறுபேருக்குமுரிய ஆதனம் மேற்கு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம் தெற்கு சின்னப்பு தருமலிங்கத்துக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம் இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளனைத்தும் பதிவு F 329/179

சாவகச்சேரி.
3-10-1977

எஸ். வி. சதாசிவம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்.
64 14-10

## ஈட்டுவழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு. இல: 12499.

1. சீனியன்தம்பன் கைம்பெண் வள்ளி
2. வேலன் மகள் சின்னம்மா — கரணவாய் வடக்கு, வல்வெட்டித்துறை — வழக்காளிகள்

எதிராக

1. கந்தையா காசிவிசுவநாதன்
2. பெண் பார்வதிதேவி — கரணவாய் வடக்கு, கொற்றுவத்தை வல்வெட்டித்துறை — எதிராளிகள்

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1977 ம் ஆண்டு மார்கழி மாதம் 1ந் திகதி (1-12-77) வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று பொலிகண்டிக குறிச்சியிறை பழைய சீமா நில. பர 6 குளி 9. இதில் மேற்குப்புறமாக நில. பர 3. எல்லை கிழக்கு கணபதி பெண் பசுபதிக்குடையவாதனம். வடக்கு சின்னையா திருநாவுக்கரசுவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு கையொழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள் அடங்கலும் பதிவு (ஏ. 68/157) (மதிப்பிட்ட விலை ரூபா 6000/-)

| | | |
|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா | 2837 50 |
| வட்டி ரூபா 1500/- க்கு 10 வீதப்படி 29-10-1973 தொடக்கம் 29-7-1974 வரை | ரூபா | 112 50 |
| வட்டி ரூபா 2950/- க்கு 5 வீதப்படி 30-7-1974 தொடக்கம் 30-1-1975 வரை | ரூபா | 73 75 |
| தொகை | ரூபா | 3023 75 |
| கொடுக்கப்பட்ட தொகை | ரூபா | 1500 00 |
| மிகுதித் தொகை | ரூபா | 1523 75 |
| வட்டி ரூபா 1523/- க்கு 5 வீதப்படி 30-1-75 தொடக்கம் 1-12-77 விற்பனவுவரை | ரூபா | 215 75 |
| மொத்தம் | ரூபா | 1739 50 |

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்

வி. எம். ரோட்
பருத்தித்துறை 13-10-77
65 21-10.

## THOUGHTS TO BE TREASURED

தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல மூன்கட்டை வீட்டினை
உன்னத் தகும்சுத்த சைவர் உபாயமே.

Their own selves, the Supreme Lord, His Manifestation, called Sadasivam, the Tri padarthas Pati, Pasu and Pasam, taintless emancipation from the old beginningless bondage, — these are the matters to be pondered over by Suddha Saivas.

---

**Hindu Organ**

Friday, 21st October, 1977.

## SUITABLE READERS BY COMPETENT AUTHORS

Once again we feel the need to remind the Government of its duty in the matter of revising the procedure for the preparation of readers and supplementary books for use in schools with particular reference to the study of religion.

The Minister of Education has set about his arduous task in a very enthusiastic manner recognising the fact that all religions must enjoy full freedom in all spheres of life and therefore most appropriately in the spiritual section. That the dictatorial attitude of the previous Administration has undone the noble work of the distant past has been accepted by all. Hence remedial measures have to be introduced at the earliest.

It cannot be denied that there is a marked change in the mind of political leaders; they seem to realize that their thoughts should be noble, laudable and noteworthy. For this purpose religious education is a *sine qua non*.

It is not our intention to blow the trumpet of the Jaffna Saiva Paripalana Sabhai; but it has become necessary to recapitulate the worthy work of this organization covering almost a century in the field of service to the people by way of providing the proper basis for the dissemination of true knowledge. The Great Navalar is being remembered throughout the religious world for the invaluable services he had so thoughtfully rendered by writing, editing and publishing what was considered absolutely necessary for real education.

The noble disciples of the Great Navalar who established the Sabhai had the forethought to extend the praiseworthy work of their leader by setting up an efficient Press and providing the capable personnel for the publication of books, readers, tracts and above all the journals *Hindu Organ* and *Inthusathanam*. Thus here we have the necessary equipment and the proud tradition to persuade the Government to entrust to the Sabhai the responsibility of providing religious texts and general Tamil books.

Hence our plea at this crucial juncture, when the wind is welcome, is that our Sabhai be once again allotted its legitimate and appropriate share in the matter of providing Tamil - speaking children with suitable books — readers main and supplementary.

# Saiva Jnana Darshanam

## Sutram 2

## Relating to Prakriti and its Evolutes

We are all children of eternity. We have witnessed cycles and cycles of worldly existence. We have times without number willingly or unwillingly gone through the mill of living and dying. We have seen dull periods of involution and active periods of evolution. This has been our fate — our predicament because we are slaves of prakriti. We are born in prakriti, we live in prakriti and we die in prakriti.

### *Senses — main evolutes of prakriti*

These senses drag us out. We are seeking for pleasure and happiness where it can never be found For countless ages we are all taught that this is futile and vain. Yet, like moths hurling themselves against the flame we are hurling ourselves again and again into sense pleasures hoping to find satisfaction there. We return again and again with freshened energy. Thus we go on till we are crippled. We die cheated by prakriti.

### *Intellect — the best born of prakriti*

Intellect is the province of Science and Mathematics. We go on discovering secret after secret of nature and we invent machines based on those discoveries. We go a few steps forwards and there arises in front of us two walls, space and time, that cannot be surmounted and we say if we are physical scientists that this universe is a composite mechanical device of wheels within wheels revolving round and round counteracting each other perhaps producing neutrons and electrons. If we are atomic scientists, we accept the findings of the physical scientists but we go a step further and pronounce that they — the neutrons and protons — are annihilated by powerful cosmic radiation waves that come out from the utmost depths of outer space. The mathematician whose thinking always circled round that unknown beejam 'X' and whose approach to the processes of introspection and abstraction is more pure and more powerful goes to even greater depths of insight, comes out with a statement that appears to be religious. These mathematical philosophers have come to a stage to believe that this mysterious universe is after all an outcome of a mathematical thought of a mysterious universal mind. We are not inclined to pursue and test the truth of their findings and we leave it to the university dons of this country for special study and research. These scientists and mathematicians are not free men in the way we understand what freedom is They always work as prisoners of objective knowledge, imprisoned within the prison walls of their intellect.

### *Time — like Karma born of the soul*

Take the case of time. No doubt, it creates. But it creates to destroy. It waits not for great men, not even for prophets It swallows the sinner and the saint alike. All our cherished creations arts, sciences, cultures, civilisations, everything is rushing to the inevitable goal of destruction. None can stem the tide of time whose principle is 'create to destroy.'

### *Evolution proceeds from involution*

Just as a seed does not immediately become a tree, just as a seed has to work for sometime beneath the soil, the universe also in its unmanifested form has a period of unmanifested action. The cosmic dance of Siva never stops, and it goes on in its own fine subtle form even during this period of involution. In other words, the universe is kept spiritually warm even in its involved state. When it begins to evolve, creation begins. The fine becomes the gross, and the involved beings — the infinite species in their infinite forms including the highest developed human forms once again come back roused to life and existence. If we take the human being and examine the various sariras (bodies) in which it is encased, it is composed first of this external covering the body, the sthula sarira consisting of the Pancha Bhutas, organs of action and organs of knowledge. This external body is the one that is burnt after death. Behind this is the finer subtle Sukshuma Sarira, the great abode of our past karmas, impressions and memories. It is this body that persists after death giving its direction to our repeated births and deaths. Behind this is the spiritual body — the Karma Sarira that glows with the twinkling of intelligence, peculiar to it, and giving to it its individualised existence. It will be learnt later that in the realised state it is this spiritual body of an ever expanding nature that becomes the abode of bliss - the abode of the finest of our feelings like அபரா அன்பு — the abode of the finest of Experiences like சிவாநு பவம் — the abode of the finest of our freedoms like ஆன்ம சுதந்தரம்.

All the qualities and powers of the gross physical body are burrowed from the fine subtle body which burrows its power and luminosity from the spiritual body of the Soul.

## ASTONISHING !

The whole world breathed a sigh of relief when it was known that the 86 passengers in the hijacked plane were rescued by West German rescue squad.

## Auction Sale

I shall sell by Public Auction the unredeemed Jewellery Pawned between 1 1-73 and 31-3-76 with Messrs V. K. Rasalingam & Son, "Vasantham," Manipay, on Saturday, 19-11-1977 commencing at 9.00 a. m. at the said Pawn Shop.

V. S Cuttipillai,
Auctioneer.

"Raja Giri,"
643, K. K S. Road,
Jaffna.

21 & 28

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, October 21, 1977.

Editor-in-Chief B. N. Sivapirakasam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org